# BUDDIST NATIONALIST SUPREMACY ON MUSLIMS IN POST WAR SRI LANKA

**A.W.F. Benazir**[127]

Correspondence: awfnusla@gmail.com

ABSTRACT

Sri Lanka is a country with a multicultural society. In the modern world, nationalism is a critical factor of today's conflict. In Sri Lanka, there are 70% of Buddhists. Tamils and Muslims are minority people. They are 13.7% of the total population. In ancient time there was a good relationship between Buddhists and Muslims. However, following the end of Sri Lankan civil war in 2009, the relationship between them began to collapse. The victory of the war was seen as a victory of Buddhists. And also the rise of religious fundamentalist groups in the post-war period caused tension among ethnic groups. These nationalist groups have influenced the Muslim community beyond the limits of tolerance. The research problem of this study is to explain the impacts of Buddhist nationalism on the Muslim community. The study refers to the development of Buddhist nationalism in pre-war Sri Lanka and its influence in politics. The objective of this study is to find out the origin and the activities of Sinhala Buddhist nationalism and its impact on the Muslim community in the post-war period. This study takes the form of qualitative and descriptive analysis and the data was collected from secondary sources. The formation of Buddhist nationalism in post-war Sri Lanka is aimed at protecting the Buddhist ideology and their activities which are supported by the government against the Muslim community. It is found out from the data analysis that though the Buddhist nationalism is formed to protect Buddhism, it has been influencing over other communities.

**Keywords:** nationalism, minority, post-war Sri Lanka, Muslim community

**ஆய்வுச் சுருக்கம்**

இலங்கை பல்லின சமூக அமைப்பைக் கொண்ட ஒரு நாடாகும். நவீன உலகில் இன்று இடம்பெறுகின்ற மோதல்களுக்கு பிரதான காரணமாக தேசியவாதம் செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. இங்கு பௌத்தர்கள் 70% வாழ்ந்து வருகின்றனர். மேலும் தமிழர்களும் முஸ்லிம்களும் சிறுபான்மையினராக வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் மொத்த சனத்தொகையில் 13.7% வீதமானவர்களாவர். ஆரம்பகாலத்தில் முஸ்லிம்கள் மற்றும் பௌத்தர்களுக்கு இடையில் நெருங்கிய உறவு காணப்பட்டது. எனினும் 2009ஆம் ஆண்டின் இலங்கையின் உள்நாட்டு யுத்த முடிவினைத் தொடர்ந்து இவர்களுக்கு இடையிலான உறவில் விரிசல் நிலை ஏற்பட ஆரம்பித்தது எனலாம். யுத்த வெற்றியானது பௌத்தர்களுக்கான வெற்றியாக பார்க்கப்பட்டதுடன் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் மத அடிப்படைவாதக் குழுக்களின் எழுச்சி இனங்களுக்கிடையிலான பதற்ற நிலைக்கு காரணமாக அமைந்தது. இத் தேசிய வாதக் குழுக்கள் சகிப்புத்தன்மை என்ற வரம்பை மீறி முஸ்லிம் சமூகத்தின் மீது பல வழிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. முஸ்லிம் சமூகத்தின் மீதான பௌத்த தேசியவாதத்தின் தாக்கங்களை விபரிப்பதே ஆய்வுப் பிரச்சினையாகும். மேலும் யுத்தத்திற்கு முன்னரான இலங்கையில் பௌத்த தேசியவாதம் வளர்ச்சி அடைந்த விதத்தையும் இன்று அது அரசியலில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தையும் குறிப்பதாக இவ் ஆய்வு இடம்பெற்றுள்ளது. யுத்தத்தின் பின்னர் சிங்கள, பௌத்த தேசியவாதத்தின் தோற்றம், செயற்பாடுகள் மற்றும் முஸ்லிம்கள் மீதான தாக்கம் என்பவற்றை இனங்காணுதல் இவ் ஆய்வின் நோக்கமாக உள்ளது. இவ் ஆய்வு பண்பு ரீதியான விபரணப் பகுப்பாய்வாகக் காணப்படுவதுடன் இதற்கான தரவுகள் இரண்டாம் நிலைத் தரவுகளிலிருந்து பெறப்பட்டுள்ளன. யுத்தத்திற்கு பிந்திய இலங்கையில் பௌத்த தேசியவாதத்தின் உருவாக்கமானது பௌத்த கருத்தியலை பேணிப்பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கில் அமைந்திருந்தாலும் இத்தேசியவாதிகளின் செயற்பாடுகளானது முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான வகையில் அரசாங்கத்தின் அனுசரனையுடன் இடம்பெற்று வருகின்றது. இப் பௌத்த தேசியவாதமானது

[127] Department of Political Science, South Eastern University of Sri Lanka.

மதத்தைப் பாதுகாக்க உருவாக்கப்பட்டாலும் ஏனைய சமூகங்கள் மீது மேலாதிக்கத்தினை செலுத்தி வருகின்றமையை ஆய்வுப்பகுப்பாய்வின் மூலம் கண்டு கொள்ள முடிகின்றது.

**பிரதான சொற்கள்** : தேசியவாதம், சிறுபான்மை, யுத்தத்திற்குப் பின்னரான இலங்கை, முஸ்லிம் சமூகம்.

**அறிமுகம்.**

பௌத்த தேசியவாதம் என்பது சிங்கள கலாசாரம், இனம் ஆகியவற்றை மையமாகக் கொண்ட கருத்தியலாகும். மேலான்மை குழுக்கள் தம் ஆதிக்கத்தை நியாயப்படுத்தவும் வலுப்படுத்தவும் கையாளும் ஒரு வழிமுறையே தேசியவாதமாகும் (இ.ஃ.ஜாஸ், சிவகுமார், பௌசர், ரமேஷ், 2015). இது தேரவாத பௌத்தத்திற்கு முக்கியத்துவம் அளிப்பதாகவும் இலங்கையின் பெரும்பான்மை இன மக்களான சிங்கள மக்களின் நம்பிக்கையை பெற்ற அமைப்புக்களாகவும் தொழிற்படுகின்றது. இலங்கை அரசானது ஓர் பல்லின சமூக அமைப்பைக் கொண்டதாகும். இங்கு பெரும்பான்மையினராக பௌத்தர்கள் 70.2 சதவீதம் வாழ்கின்றனர். சிறுபான்மையினராக இந்துக்கள் 12.6 வீதமும் முஸ்லிம்கள் 9.7 சதவீதமும் கிறிஸ்த்தவர்கள் 7.4 வீதமும் வாழ்ந்து வருகின்றனர் ( Census of population and housing, 2012). இலங்கை பிரித்தானியர்களின் காலணித்துவத்திற்கு உட்பட்டிருந்த காலப்பகுதியில் படிப்படியாக சிறுபான்மை மதத்தினருக்கெதிரான நெருக்கடிகள் ஆரம்பமானது.

எனினும் 1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து இந் நிலை முற்றுப் பெறும் என எதிர்பார்க்கப்பட்டாளும் கூட சோல்பரி யாப்பு இலங்கையை ஓர் சமயச் சார்பான நாடாக அறிமுகப்படுத்தாவிடினும் அதன் செயற்பாடுகளில் மதத்தின் செல்வாக்கு காணப்பட்டது. குறிப்பாக 1956ம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட தனிச் சிங்களச் சட்டம் சிறுபான்மையினர்க்கு குறைந்தபட்ச பாதுகாப்பினையே வழங்கியது. இவை யாவும் பௌத்த மதத்தை ஓர் தேசியவாத சிந்தனையாக மாற்றுவதற்கான அடித்தளத்தினை வழங்கியது எனலாம். மேலும் இதனைத் தொடர்ந்து வந்த 1972ம் ஆண்டைய முதலாம் குடியரசு யாப்பு, 1978ம் ஆண்டின் இரண்டாம் குடியரசு யாப்பு என்பன இலங்கையை சமயச் சார்பான நாடாக மாற்றியது. இரண்டாம் குடியரசு யாப்பின் 2வது அத்தியாயத்தின் 9வது சரத்தானது “இலங்கை குடியரசில் பௌத்த மதத்திற்கு முதன்மை ஸ்தானம் வழங்கப்படுதல் வேண்டும் என்பதோடு பௌத்த சாசனத்தை பேணிப் பதுகாத்தலும் பேணி வளர்த்தலும் அரசின் கடமையாக இருத்தல் வேண்டும்” (2ம்குடியரசு யாப்பு, 1978) எனக் குறிப்பிடுகின்றது.

அவ்வாறே யாப்பின் 3ம் அத்தியாயத்தின் 10ம் சரத்தின் அனைவருக்கும் மதச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டிருந்தாளும் மேற்கூறிய வகையில் பௌத்த மதத்திற்கு முதன்மை ஸ்தானம் வழங்கப்பட்டுள்ளமையானது ஏனைய மதத்தை புறந்தள்ளும் வகையில் அமையப் பெற்றுள்ளது என்ற விமர்சனங்கள் எழ வழிவிட்டுள்ளது. இவ் யாப்பு ரீதியான ஏற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டே மத ரீதியான செயற்பாடுகள் அரச ஆதரவுடன் இடம் பெற வழிவகுத்தது. இவை யாவும் இறுதியில் நீண்ட கால யுத்தத்திற்கு வழிவிட்டுள்ளது.

யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில் யுத்த வெற்றியானது பல பௌத்த தேசியவாத குழுக்கள் தோன்ற வழிவிட்டது எனலாம். பௌத்தம் உலகின் மிக அதிகமாக சமாதானத்தை போதிக்கும் மார்க்கங்களுள் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இருந்த போதிலும் வரலாற்றில் அது வன்முறை பக்கங்களை கொண்டதாகவே காணப்பட்டு வந்துள்ளது (votta, 2007). குறிப்பாக பொதுபலசேனா, சிங்களே, சிங்கள ராவய, ராவனபலய போன்ற தேசியவாத குழுக்கள் தோற்றம் பெற்றன (Fowsar, 2014). இவர்கள் முஸ்லிம்களின் ஒற்றுமையை உடைக்க பல பிரசாரங்களையும் தாக்குதல்களையும் நடாத்தினர். இப்பிரச்சாரம் சிறுபான்மை மக்கள் அதிகமாக வாழும் வடக்கு கிழக்கு உட்பட நாடு முழுவதும் பரவுவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

குறிப்பாக பௌத்த மக்களை முஸ்லிம்களுக்கு எதிராக தூண்டி விடுவதற்காக தேசியவாத அமைப்புக்கள் கையாண்ட பிரதான உத்தியே அந்தந்த அமைப்புக்களின் உறுப்பினர்கள், குழுக்களை தூண்டிவிட்டு போராட தொடங்கியமையாகும். இவற்றின் விளைவே முஸ்லிம்கள் ஹலால் சான்றிதல் பிரச்சினை, மாடு அறுத்தல் பிரச்சினை, வணக்க வழிபாடுகளில் தடையினை ஏற்படுத்துதல், வணக்கஸ்தளங்களை உடைத்தல், பொருளாதாரத்தில் தடைவிதித்தல், சில இடங்களில் அத்துமீறி நுழைந்து இது பௌத்தர்களின் புனித நிலம் என அறிவித்தல், பெண்கள் ஹிஜாப் அணிதல் தடைசெய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தல், இவற்றிற்கு மேலாக முஸ்லிம்கள் அவர்களது சொந்த இடங்களுக்கு திருப்பி அனுப்பப்படல் வேண்டும் என்று ஊடகங்கள் மற்றும் பேரணிகள் மூலமாகவும் அறிவித்தனர். இவ்வாறு பௌத்த தேசியவாதத் தோற்றமானது முஸ்லிம்கள் மீது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது எனலாம்.

பிரதானமாக பௌத்த தேசியவாத அமைப்புக்கள் பின்வருவன காணப்படுகின்றன.

**பொதுபலசேனா**

குறிப்பாக ஜாதிக ஹெல உறுமய (JHU) என்ற கட்சியானது சிங்கள பௌத்தர்களின் நலன்களை மேம்படுத்தவும் அரசியல் விடயங்களில் பௌத்த வழிகாட்டல் தத்துவங்களை ஏற்படுத்தவும் அதே போல தமிழ் வன்முறைகளை படை கொண்டு துடைத்தெறியவும் உருவாக்கப்பட்டது (Imthiyas, 2010). அது தனது நோக்கத்தை அடையுமுகமாக காலாகாலம் முஸ்லிம்களுக்கு எதிரான **கருத்துக்களை** வெளியிட்டுக் கொண்டு இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. எனினும் இக்கட்சியானது அதனது கொள்கை தொடர்பில் தீவிரமாக செயற்படவில்லை என்ற அதிருப்தி கட்சிக்குள்ளேயே காணப்பட்டமையும் தீவிரமாக செயற்படக் கூடிய தரப்பினர் உருவாகக் காரணமாகியது.

அந்த வகையில் ஜாதிக ஹெல உறுமய என்ற பௌத்த மதத்தை பின்புலமாகக் கொண்டு இயங்கும் அரசியல் கட்சியிலிருந்து கலகொட அத்தே ஞானசார தேரர் மற்றும் கிரம விமல ஜோதி தேரர் ஆகிய இரண்டு பிக்குகள் தம் விருப்பிற்கு ஏற்ப ஜாதிக ஹெல உறுமய செயற்படவில்லை என சுட்டிக்காட்டி அக்கட்சியிலிருந்து பிரிந்து சென்று பொதுபலசேனா (BBS) என்ற அமைப்பை 2012 ஜுன் காலப்பகுதியில் உருவாக்கினர். பௌத்த தத்துவங்களைப் பாதுகாத்தல் என்ற நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட இவ் அமைப்பு பின்னர் இலங்கையை சிங்கள பௌத்த தேசமாக மாற்றுவதை தம் பிரதான நோக்கமாக அறிவித்துக் கொண்டது. இவ்வமைப்பின் ஸ்தாபகராக கிரம விமல ஜோதி தேரரும் அதன் செயலாளராக கலகொட அத்தே ஞனசார தேரரும் காணப்படுகின்றனர்.

**சிங்கள ராவய**

இது ஓர் சிங்கள பௌத்த அமைப்பாகும். சிங்கள ராவய என்றால் சிங்கள கர்சனை என்பதாகும். இவ் அமைப்பு புத்த மதகுருமார்கள் மற்றும் பாமர மக்களைக் கொண்டுள்ளது. இக் குழுவின் தலைவர் அகம்மம் தயரத்ன தேரர் ஆவார். இவ் அமைப்பு அனுராதபுர சன்னதி மீதான தாக்குதல் மற்றும் தெஹிவலை மசூதி மீதான தாக்குதல்களுக்கு உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்றது (farzana et al,2014).

**ராவண பாலய**

ராவண பாலய எனும் அமைப்பானது 2012ம் ஆண்டு நிறுவப்பட்ட ஒரு பௌத்த தேசியவாத அமைப்பாகும். இதன் தலைவர் வென்இத்தேகண்டே சதாதிஸ்ஸ தேரர் ஆவார்.

**ஆய்வுப் பிரச்சினை**

யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில் இன நல்லிணக்கத்தை கொண்டு வருவதில் அரசாங்கம் மற்றும் சமூக நிறுவணங்கள் சர்வதேச நாடுகளின் பங்களிப்புடன் செயற்பட்டு வருவதனைக் காணலாம். எனினும் இச் செயற்பாடுகள் தோல்வியிலேயே முடிவடைகின்றன. இதற்குப் பிரதான காரணம் யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில் எழிற்சி அடைந்த பொது

பல சேனா, சிங்கள ராவய, ராவன பலய போன்ற பௌத்த தேசியவாத அமைப்புக்களின் தோற்றப்பாடாகும். இத் தேசியவாத அமைப்புக்களின் தோற்றமானது முஸ்லிம் சமூகத்திற்கு மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் இவ் அமைப்புக்களானது முஸ்லிம் மக்கள் மீது பல்வேறு வகைகளில் அடக்குமுறைகளையும் கையாண்டு வருகின்றது.

## ஆய்வு நோக்கம்

யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில் பௌத்த தேசியவாதத்தின் மேலாதிக்கம் எனும் இவ் ஆய்வானது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இடம்பெற்றுள்ளது.

- யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில் செயற்பட்டு வருகின்ற பௌத்த தேசியவாத அமைப்புக்களை அடையாளம் காணல்.
- யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் பௌத்த தேசியவாத அமைப்புகள் முஸ்லிம்கள் மீது ஏற்படுத்தும் அடக்குமுறைகளை வெளிப்படுத்தல்.

## ஆய்வு முறையியல்

இவ் ஆய்வானது பண்பு ரீதியான விமர்சனப் பகுப்பாய்வாகும். இதற்கான தரவுகள் இரண்டாம் நிலைத் தரவுகளிலிருந்து பெறப்பட்டுள்ளது. அவ்வாறே இரண்டாம் நிலைத் தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தள குறிப்புகள், ஆய்வுக் கட்டுரைகள், அரசாங்க ஆவணங்கள் போன்றன பயன்படுத்தப்பட்டு பகுப்பாய்வுக்கு உற்படுத்தப்பட்டன.

## பகுப்பாய்வும் கலந்துரையாடலும்

### முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்கள்

குறிப்பாக அண்மைய வருடங்களில் முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரமடைந்து வருகின்றன. இஸ்லாமிய ஷரியா சட்டம் தொடர்பாக கேள்வி எழுப்பல், இலங்கைளின் சட்டமுறைத் தன்மைக்குட்பட்ட இஸ்லாமிய சட்டத்தினூடாக ஹலால் சான்றிதல் வழங்குவதிலின்றும் தடுத்தல், ஹலால் உணவுகளை மக்கள் நுகர்வது தொடர்பான எதிர்ப்பு, இஸ்லாமிய ஆடை அமைப்பிற்கு எதிரான கருத்துக்கள், இஸ்லாமிய மதத்தினை மற்றும் அதன் விழுமியங்களை பின்பற்றுவதற்கான எதிர்ப்பு, அத்தோடு வழிபாட்டுத் தளங்களுக்கு எதிரான தாக்குதல்கள், முஸ்லிம் கடைகள் மற்றும் நிறுவனங்களைப் புறக்கணித்தல் போன்ற பல்வேறு வடிவிலான வன்முறை மோதல்கள் குறிப்பாக முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் அண்மித்து வாழும் பகுதிகளில் இடம்பெற்று வருவதனைக் காணக்கூடியதாக உள்ளதோடு அது முஸ்லிம் சிங்கள உறவை அதிகளவில் பாதித்துள்ளது. மேலும் இவ்வாறான தாக்குதல்களுக்கு மத்தியில் முக்கிய தீவிரவாத குழுக்களான பொதுபலசேனா, ராவணபலய, சிங்கள ராவய, சிங்ஹ லே போன்ற மத அடிப்படைவாதக் குழுக்கள் இருந்து வருவதோடு பல அரசியல் வாதிகளும் இதன் பின்புலத்தில் தொழிற்பட்டு வருகின்றனர்.

### மத வழிபாடு மற்றும் போதனை மையங்கள் மீதான தாக்குதல்கள்

இலங்கையில் அண்மைக்காலமாக முஸ்லிம்களின் மத வழிபாட்டுத் தளங்கள் மற்றும் சமய போதனை மையங்கள் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் 2011 இல் நானூறு வருடங்கள் பழமையான முஸ்லிம் பள்ளிவாசல் தாக்குலுக்கு இலக்கானது. இதற்கு அடிப்படைக் காரணமாக சிங்கள பௌத்தர்களின் புனித இடத்தில் இப்பள்ளிவாசல் கட்டப்பட்டமையாகும். இந்த தாக்குதலில் பிக்கு ஒருவரின் தலைமையின் கீழ் நூற்றிற்கும் மேற்பட்ட மக்கள் குழு ஒன்று சேர்ந்து தாக்கியதாக கூறப்படுகின்றது. “அமந்தா தம்ம தேரர்” இது தொடர்பாக கூறும்போது உள்நாட்டு முஸ்லிம்கள் தமக்குரித்தான பகுதியில் பள்ளிவாசலை உருவாக்க முற்பட்டதன் விளைவால் தாக்கப்பட்டது” எனக் கூறியிருந்தார் அதேவேளை இது தொடர்பில் பொலிஸ் தரப்பிலிருந்து எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இவ்வாறு சிங்களவர்கள் மேலாதிக்கம் செலுத்தக் கூடிய பகுதிகளில் இவ்வாறான தாக்குதல்கள் இடம்பெற்று வந்துள்ளன. மேலும் 2012.04.20 இல் பௌத்த துறவிகள் தலைமையில் சுமார் 2000 சிங்கள இனத்தவர்கள் தம்புள்ளை பிரதேசமானது பௌத்தர்களின் புனித இடம் எனும் அடிப்படையில் அங்குள்ள பள்ளிவாசல் அன்று இரவு பெற்றோல் குண்டுகளால் தாக்கப்பட்டது எனக்கூறியிருந்தார். அதேவேளை இது தொடர்பில் பொலிஸ் தரப்பிலிருந்து எந்த நடவடிக்கைளும் மேற்கொள்ளப்படவில்லை.

தொடர்ந்து இரண்டு நாட்கள் கடந்து முன்னைய பிரதமரும் மத அலுவல்கள் தொடர்பான அமைச்சருமான தி.மு. ஜயவர்த்ன பௌத்தர்களின் புனிதத் தளத்திலிருந்து குறித்த பள்ளிவாயலை அகற்றவும் அதனை வேறொரு இடத்திற்கு மாற்றவும் கட்டளை பிறப்பித்தார். இலங்கையின் வரலாற்றில் முதலாவது பிக்குவினால் ஏற்படுத்தப்பட்ட பள்ளிவாலுக்கு எதிரான தாக்குதலாகவும் முஸ்லிம் இனத்தவரின் வெள்ளிக் கிழமை நாளாகவும் விளங்குகின்றது. அத்தோடு அறிக்கைகளின் படி குறித்த தாக்குதல்கள் அப்பிரதேச மக்களால் அன்றி ஏனைய பகுதிகளில் இருந்து வரவழைக்கப்பட்டனர் என்ற வி'மக்கருத்துக்கள் பரப்பப்பட்டுள்ளன. அந்தவகையில் தம்புள்ளை நகரம் பௌத்தர்களின் புனித இடம் என்றும் அதில் பௌத்தர்களைத் தவிர ஏனைய சமூகத்தினர் நுழைய முடியாது எனக் கூறப்பட்டுள்ளது. இதனூடாக அப்பிரதேசத்தில் சிங்கள முஸ்லிம் உறவில் விரிசலை இது ஏற்படுத்தியுள்ளது. இருப்பினும் தம்புளை பள்ளிவாயில் 60 ஆண்டுகளுக்கு முன்னரே சட்ட ரீதியாக பதிவு செய்யப்பட்டதாக ஆதாரங்கள் உள்ளன.

இவ்வாறான தாக்குதலுக்கு மத்தியில் நாட்டின் பல பாகங்களில் பள்ளிவாயில்களை நிறுவுதல் மற்றும் மதப் போதனை மையங்களை நிறுவுதல் தொடர்பாகவும் சிங்கள பௌத்தர்களிடமிருந்து தாக்குதல்களும் மேலாதிக்கமும் கிளம்பியது. அந்தவகையில் 2012 தெஹிவலையில் மத்ரஸா தாருள் குரான் புரானில் இமாம் தாக்கப்பட்டது அதேபான்று 2012 இல் மட்டக்களப்பு உன்னிச்சை கிராமத்தில் மொஹிதீன் ஜு்ம்மா பள்ளிவாயல் எரிக்கப்பட்டது. அதேபான்று கொழும்பு கொஹிலவத்த வெள்ளிபிடியவில் மொஹிதீன் ஜு்ம்மா பள்ளிவாயலுக்கு எதிரான தாக்குதலின் போது ஒலிபெருக்கி மற்றும் பள்ளிவாயலின் ஒலி அமைப்புக்கள் தாக்கப்பட்டது. 2012 ஒக்டோபரில் ஹஜ்ஜுப் பெருநாளில் அநுராதபுரத்தில் தர்க்கா பள்ளிவாயல் எரிக்கப்பட்டது. 2013 ஜனவரியில் பள்ளியை அகற்றுமாறு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து 2013 ஜனவரியில் கண்டி பிரதேசத்தில் மீரா மக்காம் பள்ளிவயல் சுவர்கள் இழிவுக்குள்ளாக்கப்பபட்டதோடு வெளிப்படையாக முஸ்லிம்களுக்கு எதிராக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. 2013 ஜுலை 18 நோன்பு மாதம் மஹியங்கனை மஸ்ஜிதுல் அரபா பள்ளிவாயலில் ஜும்மா தொழுகை நடாத்தப்பட்ட வேளை பள்ளிவாயலுக்குள் பன்றி இறைச்சி மற்றும் கற்கள் எறியப்பட்டது. அதேபான்று கொழும்பு கிரேன்ட்பாஸ் பள்ளிவாயலும் பல தடவைகள் தாக்கப்பட்டன. இதேபோல 2014 ஜுனில் மத ரீதியிலான பதற்ற நிலையும் வன்முறையும் தூண்டிவிடப்பட்டன. எனவே இவ்வாறான தாக்குதல்கள் இஸ்லாமிய மதம் மற்றும் அதன் கொள்கைளுக்கான தாக்குதல் மாத்திரம் அல்ல மாறாக இலங்கையில் வாழும் முஸ்லிம்களின் நிலைபேற்றுக்கும் எதிரான சவாலாகவே கருதப்படுகின்றது. மேலும் 2015 ஜுலை மீறா மக்காம் பள்ளிவாயல் கற்களால் தாக்கப்பட்டது.

இவ்வாறு யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியினை நோக்கும் பொழுது 2009 தொடக்கம் 2012 வரை குறிப்பிட்ட அளவு பள்ளிவாயலுக்கு எதிரான தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன. எனினும் பொதுபலசேனாவின் தோற்றத்திற்குப் பின்னர் முஸ்லிம்களின் மதஸ்த்தளங்கள் மற்றும் போதனை மையங்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளது. 2013 ஜனவரி முதல் ஜுலை வரையான காலப்பகுதியில் மத ரீதியான தாக்குதல்களாக 2 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அத்தோடு 2014 இல் 1 பள்ளிவாயல் முற்றாக அழிக்கப்பட்டதுடன் 26 பள்ளிவாயல்கள் பகுதியளவில் சேதத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளது. மேலும் 2015 இல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் மத நிறுவனங்கள் 2 தாக்கப்பட்டுள்ளது. 2015 நவம்பர் முதல் 2016 ஜுன் வரையான காலப்பகுதியில் 8 சதவீதமான சொத்துக்கள் சேதத்திற்குள்ளாகியுள்ளன.

இவ்வாறான சம்பவங்களின் ஊடாக முஸ்லிம்களுக்கே உரித்தான பல ஆண்டுகள் பாதுகாக்கப்பட்டு வந்த பழமையான மதஸ்த்தலங்கள் உடைக்கப்பட்டுள்ளது. அத்தோடு முஸ்லிம்களின் பெறுமதி வாய்ந்த சொத்துக்கள் அளிக்கப்பட்டுள்ளன. எனவே சிங்கள முஸ்லிம் உறவில் மீண்டும் மீண்டும் விரிசலை ஏற்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

**ஹலால் எதிர்ப்பு**

யுத்தத்தின் பின்னரான இலங்கையில் ஹலால் சான்றிதல் பெற்ற உணவுகள் மற்றும் ஹலால் விளம்பரம் கொண்ட பொருட்களை நுகர்வுக்கு எதிராக கிளர்ச்சிகள் எழுந்தன. அதன்படி ஹலால் என்பது முஸ்லிம்களுக்கு சட்டமுறையானதும் அனுமதிக்கப்பட்டதாகவும் விளங்கும் அதேவேளை ஹராம் என்பது தடுக்கப்பட்டதும் முற்றாக தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றாகவும் விளங்குகின்றது. அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா (ACJU) இலங்கை முஸ்லிம்களின்கொள்கை முடிவுகளுக்கு மேற்பார்வை செய்தல் மற்றும் கண்காணித்தல் என்பவற்றுக்குப் பொறுப்புக் கூறும் அமைப்பாக உள்ளது.

இப்பிரச்சினை உள்ளூர் மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் அனைத்து முஸ்லிம்களினதும் கவனத்தை ஈர்த்தது எனலாம். முஸ்லிம்கள் பாரம்பரியமாக ஹலால் உணவுகளை அடையாளம் காண்பதில் பிரச்சினைகள் இருக்கவில்லை. செயற்கை உணவுகளின் அதிகரிப்பினால் இவ்வாறான உணவுகளில் தடை செய்யப்பட்ட உணவின் மூலக்கூறுகள் உள்ளங்கப்பட்டுள்ளனவா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. எனவே இதனூடாக ஹலால் சான்றிதலுக்கான தேவை உணரப்பட்டது. அதற்கிணங்க ACJU இத்தேவையை உணர்ந்தது. மேலும் ஏற்றுமதியாளர்கள் ஹலால் சான்றிதலின்றி சில சந்தைகளில் பொருட்களை சந்தைப்படுத்த தொடங்கினர். அத்தோடு ஏற்கனவே ஹலால் தரச்சான்றுதல் அளிக்கப்பட்டு சந்தைப்படுத்தும் நிறுவனங்கள் இப்பிரச்சினையில் தாம் தமது பொருட்களுக்கு ஹலால் சான்றிதல் வழங்குவதினின்றும் தவிர்த்துக் கொண்டது. ACJU வின் ஹலால் சான்றுதல் வழங்கும் நடவடிக்கைகள் மூலம் பொதுபலசேனா மற்றும் ஏனைய இனவாதக் குழுக்கள் முஸ்லிம்களுடன் தொடர்புபட்ட அனைத்து நுகர்வுப் பொருட்களையும் புறக்கணிக்ககூறி வெளிப்படையாக அழைப்பு விடுத்தது.

இவ்வினக்குழுக்களைப் பொறுத்த வரை ACJU வானது ஹலால் சான்றிதல் மூலம் பணம் ஈட்டுவதாகவும் அதனைக் கொடிய நோக்கங்களுக்கு பயன்படுத்துவதாகவும் குறிப்பிட்டது. அந்த வகையில் இஸ்லாத்தை பிரச்சாரம் செய்யவும் பள்ளிவாயல்களை அமைக்கவும் பயன்படுத்துவதாகக் குறிப்பிடுகின்றது. அத்தோடு இலத்திரனியல் சாதனங்களினூடாக நுகர்வுப் பொருட்களைப் புறக்கணிப்புச் செய்வதற்கான ஏனைய எதிர்ப்பு சக்திகளையும் இணைத்துக் கொண்டது. இவ்வாறான போராட்டங்களின் விளைவால் 2014 ஜனவரி 1 இல் ACJU வினால் வழங்கப்படும் தரச்சான்றிதல்கள் HAC இற்கு மாற்றப்பட்டது. இவ்வாறான ஹலால் எதிர்ப்பு நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் கொண்டு செல்லப்பட்டாலும் அரசாங்கம் இது தொடர்பாக எவ்வித கவனமும் எடுக்கவில்லை.

**பிராணிகளை அறுப்பதற்கான எதிர்ப்புக்கள்**

இஸ்லாத்தில் உணவுக்காகவும் சில சடங்கு முறைகளுக்காகவும் விலங்குகளை அறுப்பது தொடர்பாக விதிமுறைகள் காணப்படுகின்றன. விலங்குகளை அறுக்கும் செயன்முறையில் அதன் துன்பத்தை குறைப்பதன் மூலம் மனிதத்தன்மையுடன் கொலை செய்வதற்கான நெறிமுறைகளை இஸ்லாமிய ஷரீஆ சட்டமானது விலங்குகளுக்கு எதிரான கொடுமையை தடுக்கின்றது. எனவே இஸ்லாம் பற்றி நம்பிக்கை கொண்டோருக்கும் நம்பிக்கையற்றோருக்கும் பொதுவான ஒன்றாக இச்சட்டம் உள்ளது. இருந்த போதிலும் யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் குர்ஆனிய வழிமுறைகளில் விலங்குகளை அறுப்பது மாத்திரமன்றி உணவுக்காக கால்நடைகள் அறுப்பது மற்றும் ஏனைய வேறு காரணங்களுக்காகப் பலியிடுவது போன்றவற்றிற்கும் கேள்விகளை எழுப்பி அதற்கான எதிர்ப்பினை பௌத்த தேசியவாத சக்திகள் மேற்கொண்டு வந்தது. அத்தோடு விலங்குகளை அறுப்பது மனிதாபிமானமற்ற செயல் எனவும் அது பௌத்த பெறுமானங்கள் மற்றும்

பெரும்பான்மையினரின் உணர்வுகளைப் பாதிக்கும் விடயம் எனவும் விமர்சிக்கின்றனர் (Aliff, 2015).

விலங்குகளை அறுப்பதற்கான எதிர்ப்புக்கள் காரணமாக முஸ்லிம் சமூகம் தமது மத சடங்குகளை மேற்கொள்வதில் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றது. இந்நிலையில் குறிப்பாக ஹஜ்ஜுப் பெருநாள் காலப்பகுதியில் முஸ்லிம்கள் குர்பான் மற்றும் உழ்ஹியா கொடுக்கும் சந்தர்ப்பங்களில் இவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிட்டது.

மேலும் 2012 ஹஜ் பெருநாளின் போது உள்ளூர் அரசாங்க அதிகாரிகள் விலங்குகளை அறுப்பது தொடர்பாக அனுமதி வழங்குவதனை தவிர்த்துக் கொண்டனர். 2012 செப்டம்பரில் நகரசபை மட்டுப்பாடுகள் ஊடாக விலங்குகளை அறுப்பது தொடர்பாக தடைகள் பிறப்பிக்கப்பட்டன. இந்த விலங்குகள் அறுப்பதற்கு எதிரான தடை நாடளாவிய ரீதியில் அனைத்துப் பகுதிகளிலும் தொடர்ந்தது. முக்கியமாக முஸ்லிம்களின் மத செயற்பாடுகளை எதிர்ப்பதாக இது அமைந்தது. அந்த வகையில் 2013 மே 24 இல் கண்டி தளதா மாளிகைக்கு முன்னால் சிங்கள ராவயவின் உறுப்பினர் ஒருவரான “போவத்த இந்திரா ரத்ன சுவாமி” தீக்குழித்து தற்கொலை செய்து கொண்டார். எனவே விலங்குகளை துன்புறுத்தல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தீவிர எதிர்ப்பாக இது விளங்கியது. இதனைத் தொடர்ந்து பொதுபலசேனா மற்றும் ஏனைய சிங்கள தேசியவாத சக்திகள் நாடெங்கிலும் கிளர்ச்சிகளை மேற்கொள்ளத் தொடங்கினர்.

இதனது தொடர்ச்சியான போராட்டத்தின் மூலம் ஜனவரி 2016 இல், நாட்டின் ஜனாதிபதி வெளிநாடுகளில் இருந்து உள்ளூர் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இறக்குமதி செய்யப்படும் இறைச்சி தொடர்பாகவும் மற்றும் உணவுக்காக வெட்டப்படும் கால்நடைகளை தடைசெய்தல் குறித்தும் சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளை கவனம் செலுத்துமாறு உத்தரவிட்டார். எனவே இது முஸ்லிம்களின் பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் மத சம்பிரதாயங்களைப் பாதித்தது. எனவே இது தந்திரம் மிக்க நாச வேலை என முஸ்லிம் தரப்பினரால் சந்தேகிக்கப்படுகின்றது.

**இஸ்லாமிய ஷரீஆ சட்டம் மற்றும் பொருளாதார முறையை நடைமுறைப்படுத்துவதில் எதிர்ப்பு**

இஸ்லாமிய ஷரீஆ சட்டம் தொடர்பான அங்கீகாரம் குறித்து சிங்கள தேசிய வாதிகள் கவனம் செலுத்தி வருகின்றனர். முஸ்லிம்களைப் பொறுத்தவரை மனித வாழ்வின் அனைத்த சந்தர்ப்பங்களிலும் குர்ஆன் மற்றும் ஹதீஸினை பின்பற்றுகின்றனர். சமூகத்தில் எழும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் மற்றும் இஸ்லாமிய விதிமுறைகள் உட்பட வழிகாட்டலுக்கான ஆதாரமாக இவை இரண்டும் விளங்குகின்றன. எனவே யுத்தத்திற்குப் பின்னரான சூழலில் ஏற்கனவே முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்ட இஸ்லாமிய ஷரீஆ வழிமுறையிலான திருமண விவாகரத்து மற்றும் காதி நீதிமன்ற முறைகளை தொடர்ந்தும் பேணுவது பெரும் சவாலாக அமைந்துள்ளது.

இறுதியில் 2015 ஜுன் 23 இல் பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞனசார தேரர் உட்பட சில மதத்தலைவர்கள் மத்திய வங்கிக்கு சென்று இலங்கையில் நடைமுறையில் இருந்து இஸ்லாமிய ஷரீஆ சட்டம் தொடர்பாக ஆய்வு செய்தனர். அத்தோடு மத்திய வங்கி கவர்னருக்கு கடிதம் ஒன்றினை வழங்கி இஸ்லாமிய வங்கி முறையை இலங்கையில் தடைசெய்யுமாறு கோரிக்கை விடுத்தனர். 2015 சிங்கள ராவயவின் தலைவர் வணக்கத்திற்குரிய அக்மீமன தயாரட்ன தேரர் குறிப்பிடும் போது “நாட்டில் பொதுவானதொரு சட்டம் இருக்கும் பட்சத்தில் முஸ்லிம்கள் பிரத்தியேகமான சட்டங்களால் தமக்குள்ளேயே பிரிந்து செல்கின்றனர். இவர்களுக்கு மத்தியில் போதை பொருள் கடத்தல்கள் இருக்கும் நிலையில் இஸ்லாமிய சட்டம் தொடர்பாக பேசுவது மிகவும் கேலிக்கைக்குறிய விடயமாக விளங்குகிறது” அதேபோன்று இன்னும் பல சந்தர்ப்பங்களில் BBS தலைவர்கள் இஸ்லாமிய ஷரிஆ சட்டம் மற்றும் வங்கி முறைமை தொடர்பாக விமர்சித்துள்ளதோடு அதனை தடை செய்வதற்கு அரசாங்க அதிகாரிகளை வேண்டி நின்றது.

**இஸ்லாமிய ஆடை தொடர்பான பிரச்சினை**

முஸ்லிம்களின் பள்ளிவாயிலுக்கு எதிரான தாக்குதல் மற்றும் இஸ்லாமிய சட்டம் என்பவற்றிற்கு மேலாக முஸ்லிம்களின் கலாச்சார நடைமுறைகளிலும் பல எதிர்பார்ப்புக்கள் நாளுக்கு நாள் வெளிப்படுகின்றன. இஸ்லாமிய ஆடை அமைப்பில் ‘‘ஹபாயா’’‘‘ஹிஜாப்’’ மற்றும் முகத்தினை மூடுதல் போன்ற செயற்பாடுகள் காரணமாக பௌத்த தேசியவாத சக்திகளுக்கு மத்தியில் பாரிய எதிர்ப்பு காணப்பட வருகின்றது. இது நாட்டில் உள்ள முஸ்லிம்கள், முஸ்லிம் அல்லாதோர் மற்றும் இஸ்லாமிய உலகத்தினதும் கவனத்தை ஈர்த்துள்ளது. குறிப்பாக ‘‘ஹபாயா’’ மற்றும் பல்வேறு வகையான இஸ்வாமிய ஆடை அமைப்புக்கள் முஸ்லிம்களுக்கு எதிரான கிளர்ச்சிகளை தூண்டி விட்டுள்ளது.

சிங்கள மக்கள் மேலாதிக்கம் செலுத்தும் பகுதிகளில் அவ்வாறான உடைகளை அணிந்து நடமாடுவதினின்றும் மட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இது தவிர பொதுவான இடங்களில் முஸ்லிம்கள் தமது அடையாளத்தை வெளிக்காட்டும் வகையிலான ஆடைகளை அணிவதிலிருந்தும் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துமாறு அரசாங்க அதிகாரிகளை கேட்டுக் கொண்டது. பல முக்கிய நகரங்களில் உள்ள பாடசாலைகளில் முஸ்லிம் மாணவிகள் ஹிஜாப் மற்றும் நீளமான காற்சட்டைகள் அணிவது குறித்து கட்டாய தடை விதிக்கப்பட்டது. எனவே அவற்றை தமது புத்தகப்பைகளில் மறைத்து வைத்துக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது.

‘‘இவ்வாறு பெண்கள் வெளியில் நடமாடுவது குறித்து அச்சம் கொண்டதன் விளைவால் கறுப்புநிற ஹபாயாக்களை அணிவதை தவிர்த்து சிங்கள மக்கள் அதிகமாக நடமாடும் பகுதிகளில் கலர் ஹபாயாக்களை பெண்கள் அணிவதற்கு பழகிக் கொண்டனர். யுத்தத்திற்குப் பின்னர் இவ்வாறான விடயங்களால் முஸ்லிம்களுடைய இன மற்றும் கலாச்சார அடையாளம் பாதிக்கப்பட்டுள்ளதோடு அதற்குப் பொறுப்புக் கூறுவதற்கான தேவையும் இனங்காணப்பட்டுள்ளது. இருந்த போதிலும் 1980 களில் கல்வி அமைச்சினூடாக சுற்றறிக்கை ஒன்று வலைய மட்டக் கல்விப்பணிபாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன்படி முஸ்லிம் பாடசாலைக்கு தமது பாரம்பரிய ஆடையமைப்பான வெள்ளை கவுன் காற்சட்டை மட்டும் துப்பட்டா அணிவதற்கான அனுமதி வழங்க வேண்டும் எனக் குறிப்பிட்டது. இவ்வாறு முஸ்லிம் மாணவிகளது ஆடை அமைப்பு குறித்து ஏற்கனவே சுற்றறிக்கைகள் காணப்பட்ட போதிலும் யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் முஸ்லிம் மாணவிகளுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகள் தொடர்பில் சர்ச்சைகள் எழுந்துள்ளது.

**இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிரான வெறுக்கத்தக்க பேச்சுக்கள்**

சிங்கள பௌத்த மத தீவிரவாதக் குழுக்கள் முஸ்லிம்களின் இன மத கலாசாரத்துக்கு எதிரான பேச்சுக்களை கட்டவிழ்த்து விடுவதனை அதன் முக்கிய தந்திரோபாயமாக கொண்டுள்ளது. அந்த வகையில் இவ்வாறான பேச்சுக்கள் ஊடாக இலங்கையில் உள்ள முஸ்லிம்களை இஸ்லாமிய பயங்கரவாத சமூகத்தினராக சித்தரிக்க முனைவதோடு, இவர்கள் இலங்கையை ஓர் முஸ்லிம் நாடாக பயன்படுத்த முற்படுகின்றனர் எனக் கூறுகின்றனர். அத்தோடு இவ்வாறான கருத்துக்களை முகநூல், டுவிட்டர் போன்ற இலத்திரனியல் சாதனங்களுடாகவும் அச்சு ஊடகங்களினூடாகவும் சிங்களவர்களுக்கு மத்தியில் பரப்பப்படுகின்றன. பல சந்தர்ப்பங்களில் தேசியவாத இயக்கங்களின் தலைவர்கள் பகிரங்கமாக தமது வெறுப்புப் பேச்சுக்களை பரப்புவதோடு முஸ்லிம்களையும் அவர்களது மதத்தலைவர்களையும் கரடுமுரடான மற்றும் தரக்குறைவான வார்த்தைகளினூடாக விமர்சிக்கின்றனர். அத்தோடு சிங்கள மக்கள் முஸ்லிம்களை நம்பி தமது உடமைகளை முஸ்லிம்களுக்கு வழங்க வேண்டாம் என்றும் வெறுப்புப் பிரச்சாரங்களை மேற்கொள்கிறது.

2014 ஜுன் 15 இல் ஞானசார தேரர் அளுத்கமையில் தரக்குறைவான பேச்சொன்றை நிகழ்த்தினார். அதில் ‘‘மரக்கலயா’’ என்று கூறப்படும் முஸ்லிம்களை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று சிங்கள மக்களை தூண்டிவிட்டார். அத்தோடு இவர் மேலும் குறிப்பிடும் போது ‘‘ஒரு மரக்கலயா சிங்களவருக்கு எதிராக கை உயர்த்தினால் அதுவே அவர்கள் அனைவருக்குமான இறுதி முடிவாக இருக்கும்’’ என்றார். மேலும் அளுத்கம, பேருவளை பகுதியிலும் ஏனைய

பகுதிகளிலும் முஸ்லிம்களின் வர்த்தகத்தை அழிப்பதாகக் கூறியது. இவ்வாறான வெறுக்கத்தக்க பிரச்சாரங்களை பல கிராமங்களில் மேற்கொண்டது. மேலும் முஸ்லிம்களுக்கு எதிரான இவ்வாறான தாக்குதலின் விளைவால் 2014 ஆம் ஆண்டு அளுத்கமையில் நான்கு முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். அத்தோடு நூறுக்கும் மேற்பட்ட முஸ்லிம்களின் சொந்த வியாபாரம் அழிக்கப்பட்டது.

**அம்பாறை, திகன வன்முறை**

கடந்த 2018 பெப்ரவரி 26ம் திகதி இலங்கையில் முஸ்லிம்கள் அதிகமாக வாழுகின்ற அம்பாறை மாவட்டத்தில் இனவாதக் கும்பலினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலானது அம்பாறையில் ஒரு முஸ்லிம் வர்த்தகர், தனது கொத்து றொட்டியில் ஆண்மை நீக்க மாத்திரை பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் வதந்தி பரப்பப்பட்டு கடை உரிமையாளர் தாக்கப்பட்டதுடன் அம்பாறை ஜும்மா பள்ளிவாசல் தாக்கப்பட்டது. மேலும் அருகில் இருந்த முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் சேதமாக்கப்பட்டன. 500 மீற்றர் தூரத்தில் காவல் நிலையம் இருந்தும் சுமார் 1½ மணி நேரத்திற்குப் பின்னரே காவல்துறையினர் உரிய இடத்திற்கு சமூகம் அளித்தனர். இனவாதிகள் பேருந்துகளிலும், மோட்டார் வாகனங்களிலும் வருகை தந்து தாக்குதல்களை நடாத்தினர். தாக்குதலானது நடைபெற்றதன் பிற்பாடு வருகை தந்த காவல்துறையினர் தாக்குதலை மேற்கொண்டவர்களுக்கு சாதகமாகவே செயற்பட்டனர்.

இந்த சூழ்நிலையில் கடந்த 2018 பெப்ரவரி 21ம் திகதி முஸ்லிம் ஒருவரின் வாகனம் சிங்கள சகோதரர் ஒருவரின் வாகனத்துடன் விபத்துக்குள்ளாகின்றது. இருவரும் மண்ணிப்புக் கேட்டுவிட்டுச் செல்கின்றனர். எனினும் சிங்கள சகோதரருடன் மற்றும் சிலர் சேர்ந்து அவரைத் தாக்குகின்றனர். அவர் தப்பிப்பதற்காக ஒரு முஸ்லிம் கடைக்குல் நுழைகின்ற போது அந்தக்கடையானது தாக்கப்படுகின்றது. இதில் ஆறு பேர் கைது செய்யப்பட்டனர். அதனைத் தொடர்ந்து 2018 பெப்ரவரி 22ம் திகதி இரவு சிங்கள சகோதரர் ஒருவர் வாகனத்தினை திருப்பும்போது ஒரு முஸ்லிம் ஒருவரின் முச்சக்கரவண்டியின் பக்கக் கண்ணாடி உடைகின்றது. இதன் காரணமாக இங்கு முறுகல் நிலை ஏற்படுகின்றது. அந்த முச்சக்கர வண்டி சாரதி உட்பட அதில் வந்த 3 முஸ்லிம் இளைஞர்களும் லொறி சாரதியினை தாக்குகின்றனர். இந்த தாக்குதலானது சாதாரண தாக்குதலாக கருதப்பட்டதுடன் அருகில் இருந்த ஒளிப்பதிவு கமராவில் பதியப்படுகின்றது. முஸ்லிம் இளைஞர்களின் செயற்பாடானது நிச்சயமாகக் கண்டிக்கத்தக்கதும், தண்டிக்கத்தக்கதுமாக இருக்கின்ற போதிலும் அதற்கு முதல் நாள் நடந்த சம்பவம் இந்த இளைஞர்களை தூண்டி விட்டதாக கூறப்படுகின்றது.

தாக்குதலுக்குள்ளான சிங்கள சகோதரர் 10 நாட்களுக்கு பின்னர் 2018 மார்ச் 03 ஆம் திகதி கண்டி வைத்தியசாலையில் மரணமடைந்தார். இந்த சூழ்நிலையினை இனவாத சக்திகள் மற்றும் மத குருக்கள் நிலை குழைய வைத்து ஒன்றிணைந்து பிரச்சினைகளை ஏற்படுத்த முயற்சித்தனர். இதன் விளைவாகத்தான் திகன வன்முறையானது அரங்கேற்றப்பட்டது. இந்த நிலையில் காவல்துறை தரப்பினர் கடைகளையும் பள்ளிவாசல்களையும் மூடிவிட்டு வீட்டிற்குள் இருக்கும் படியும் தாம் அவற்றினைப் பாதுகாப்பதாகவும் முஸ்லிம்களிடம் வாக்களித்தனர். எனினும் இவ் வாக்குகள் யாவும் மீறப்பட்டன. முஸ்லிம்களின் கடைகள் தீக்கிரையாக்கப்பட்டதுடன் வீடுகளும் பள்ளிவாசல்களும் எரிக்கப்பட்டன. பௌத்த சகோதரர்களுக்கு சொந்தமான கட்டிடங்களில் முஸ்லிம்கள் வியாபாரம் செய்து வந்ததால் அவ்வாறான கட்டிடங்கள் சேதமாக்கப்படாமல் தாக்குதல்கள் நன்கு திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

**ஈஸ்டர் தாக்குதலும் முஸ்லிம் சமூகத்திற்கெதிரான செயற்பாடுகளும்**

2019.04.21ஆம் திகத உயிர்த்த ஞாயிறு தினத்தில் St Antony's shrine church, St Sebastian's church, Zion church, Shangari – La Hotel, Annamon Grand Hotel, Kingsbury tropal Inn, Housing complex in Demategoda போன்றன பயங்கரவாத தற்கொலை குண்டு தாக்குதல் மூலம் தாக்கப்பட்டன. இதில் 259 பேர் கொலை

செய்யப்பட்டனர் இவர்களுல் 49 பேர் வெளிநாட்டவர்களாவர். மேலும் 500 பேர் காயம் அடைந்தனர்.

இதற்கான 9 தற்கொலை குண்டுதாரிகளும் தேசிய தௌஹீத் ஜமாஅத்துடன் தொடர்புடையது என அரசாங்கத்தால் கூறப்பட்டது.

23.04.2019ல் ISIS பிரச்சார நிறுவனமான அமக் பிரச்சார நிறுவனம் இலங்கையில் கிறிஸ்தவர்களை குறிவைத்து தாக்குதல் நடத்தியவர்கள் இஸ்லாமிய அரசு போராளிகள் என்று கூறியது. இவற்றின் விளைவால் 21 மாலை முதல் பெரும் ஊரடங்கு உத்தரவு அரசால் விதிக்கப்பட்டது. மேலும் கல்முனையில் துப்பாக்கிச சூடு நடந்த பின்னர் காலவரையறையற்ற ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

இத்தாக்குதலை காரணங்காட்டி பௌத்த தேசியவாதிகள் மீண்டும் தமது மேலாதிக்கத்தை இலங்கை முஸ்லிம்கள் மீது காட்டத் தொடங்கினர். இவற்றின் ஆரம்ப தாக்குதல் சமூக வலைத்தளத்தில் ஒருவர் இட்ட பதிவால் ஆத்திரமுற்ற ஒரு தரப்பு கைகலப்பில் ஈடுபட்டது. இன நீட்சியாக முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளில் வன்முறை சம்பவங்கள் அரங்கேறின. அதில் ஒரு பிரதேசம் தான் மினுவான்கொடை. மினுவான்கொடையின் ஓர் வசதியான பள்ளிவாசலின் கண்ணாடிகள் அனைத்தையும் தூளாக்கி, அங்குள்ள கடைகளை அடித்து நொறிக்கியதுடன் தீக்கிரையாக்கினர்.

இத்தாக்குதலை மையமாகக்கொண்டு முஸ்லிம்களை தீவிரவாதிகள் அல்லது பயங்கரவாதிகள் என்ற கண்ணோட்டத்தில் பெரும்பான்மை பௌத்த சமூகம் நோக்கியது. இவற்றின் எதிர்த்தாக்கம் முஸ்லிம் பெண்கள் கறுப்பு பர்தா மற்றும் புர்கா அணிதலை தடுக்க வேண்டும் எனவும் அரசாங்கம் தனது சட்டத்தினூடாக இவற்றை தடை செய்ய வேண்டும் என்றும் கூறியது.

மேலும் பௌத்த தேசியவாதிகள் உண்ணாவிரதப் போரட்டத்தை நடாத்தியதுடன் இத்தாக்குதலுக்கு றிஷாட் பதியுதீன், ஹிஸ்புல்லாஹ், ஆசாத்சாலி போன்றோரே காரணம் எனக்கூறி அவர்களைப் பதவியிலிருந்து நீக்க கேட்டுக்கொண்டதன் எதிரொலியே முஸ்லிம் அரசியல் வாதிகள் மொத்தமாக பதவி விலகியமையாகும்.

மேலும் அவசரகால சட்டம் என்ற பெயரில் முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டதுடன் வீடுகளில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. மதரஸாக்கள் மூடப்பட வேண்டும் என்ற எதிர்கோ'ம் எழுந்தது. மேலும் சம்பிக்க ரணவக்க மட்டக்களப்பு ஷரீஆ பல்கலைக்கழகம் அரசாங்கத்தின் கண்கானிப்பில் விடப்பட வேண்டும் எனவும் அது தனியார் நிறுவனமாக இயங்க தகுதி

இல்லாதது எனவும் கூறினார்.

**முடிவுரை**

சிறுபான்மை சமூகத்திற்கெதிரான வன்முறை ஆங்கிலேயர் காலத்திலிருந்து ஆரம்பமானது என்றாளும் கூட யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில் யுத்த வெற்றியானது பல பௌத்த தேசியவாத குழுக்கள் தோன்ற வழிவிட்டது எனலாம். குறிப்பாக பொதுபலசேனா, சிங்களே, சிங்கள ராவய, ராவனபலய போன்ற தேசியவாத குழுக்கள் தோற்றம் பெற்றன. இவர்கள் முஸ்லிம்களின் ஒற்றுமையை உடைக்க பல பிரசாரங்களையும் தாக்குதல்களையும் நடாத்தினர். இப்பிரச்சாரம் சிறுபான்மை மக்கள் அதிகமாக வாழும் வடக்கு கிழக்கு உட்பட நாடு முழுவதும் பரவுவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. இவற்றின் விளைவே முஸ்லிம்கள் ஹலால் சான்றிதல் பிரச்சினை, மாடு அறுத்தல் பிரச்சினை, வணக்க வழிபாடுகளில் தடையினை ஏற்படுத்துதல், வணக்கஸ்தளங்களை உடைத்தல், பொருளாதார தடைவிதித்ததல், சில இடங்களில் அத்துமீறி நுழைந்து இது பௌத்தர்களின் புனித நிலம் என அறிவித்தல், பெண்கள் ஹிஜாப் அணிதல் தடைசெய்யப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தல் போன்ற பௌத்த தேசியவாக் குழுக்களின் மேலாதிக்கச் செயற்பாடானது இலங்கை அரசாங்கத்தின் அனுசரனையுடன் இடம் பெற்றது என்ற பல விமர்சனங்கள் எழ வழிவிட்டுள்ளது எனலாம்.

## REFERENCES

Aliff, S.M. (2015). *Post war conflict in Sri Lanka: Violence against Sri Lankan Muslims and Buddist Hegemoney*. International Letters of Social and Humanistic Sciences, 59, 109125. Switzerland: sci press Ltd. Retrived from www.scupress.com/ILSHS.59.109.

Department of census and statistics population by religion according to districts. (2012). Retrieved from http://www.statistics.gov.lk/PopHouSat/CP/2011/index.php?filename=pop4&gp=Activities&tpl=3

Dinouk Colombage. (2013). *Bodu Bala Sena: A Threat to Sri Lanka's Future*. Retrieved from http://groundviews.org/2013/03/19/bpdu-bala-sena-a -threat-to-sri-lanka-future/

Farzana, H. (2013). *Wherehave all the neighbors gone?Aluthgama riots and itsaftermath fact finding mission to aluthgama dharka town , Valipanna and Beruvale .* Colombo: Law & society Trust (LST).

Fowsar, M.A.M. (2009). *Religious Symbolism and Politics in Sri Lanka: Muslim's Grievance*. Department of Social Science, South Eastern University of Sri Lanka.

Imtiyas, A.R.M. (2010). *Politicization of Buddhism and Electoral POliticsin Sri Lanka.* Retrieved from http://www.sangam.org/2010/03/politicization on Bhuddism.pdf

Neil Devotta. (2018). Religious Intolerance in Post- War Sri Lanka. *Asian Affairs, 49*(2), 1-23.

Rameez, A. (2014). The Wave of Sinhala Buddhist Supremacism and Muslims of Sri Lanka. *In 4th International Symposium: Emerging Trends and Challenges on Sustainable Development* (2014) :35-38. South Eastern University of Sri Lanka.

Sajeetha,T.F. (2017). Ethnic Harmony in Post- War Sri Lnka. *Modern Thamizh Research, 5* (1), 2321-984, 120-131.

Razick, S., Gafoordeen, N,. & mazahir,S.M. ( 2018). Hate campaigns and attacks against the Muslims in recent Sri Lanka. *Uropean Journal of Research in Social Sciences* Vol. 6 (1), 2056-5429

Samaranayaka, T. (2013 May 5). *Understanding the causes of the Sinhala-Muslim Conflict in Sri Lanka.* Retrieved on *www.Colombotelegraph.com*

இரண்டாம்குடியரசு யாப்பு. (1978).

*ஹலால் சான்றிதழ் வழங்குவதை நிறுத்த உலமா சபை வழங்கிய உறுதி மொழியை நிறைவேற்றவில்லை, ஷரீஆ சட்டத்தை இலங்கையில் அமுல்படுத்த இடமளியோம் - பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயளாலர் கலகொடஅத்த ஞானசாரதேரர்.* (2013 ஒக்டோபர் 20). வீரகேசரி.